**கவனிக்க.**– 2007.04.20 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I: தொகுதி (IIஅ), பகுதி IV(அ) மற்றும் IV (ஆ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1495 - 2007 අප්‍රේල් 27 වැනි සිකුරාදා - 2007.04.27

1495 ஆம் இலக்கம் – 2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (IIஆ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | – |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | – |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | – |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 292 |
| உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 293 |
| அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | – |
| ஏல விற்பனைகள் | 294 |
| நானாவித அறிவித்தல்கள் | – |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, மே 04 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, ஏப்பிறல் 20 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# ஆய விற்பனையும் குத்தகையும்

## புத்தளம் மாவட்டம், நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2007/2008

*(2007 ஆம் ஆண்டு ஆடி 1 ஆந் திகதி முதல் 2008 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரை)*

2007 ஆம் ஆண்டு ஆடி 1 ஆந் திகதி முதல் 2008 ஆம் ஆண்டு ஆனி மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலத்தில் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள கள்ளுத்தவறணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) தற்பொழுது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப்பத்திரங்கள் பொது நிபந்தனைகளுக்கு அமைவாகவும் ;

(ஆ) 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு இடும் நிபந்தனைகளுக்கு அமைவாகவும்.

2. ஒவ்வொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் பெற்றுக் கொள்ளக்கூடிய உரிய படிவங்களில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விளம்பரங்களுக்கு அமைய வைப்புப் பணமாக பிரதேச செயலாளர் அலுவலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியான அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக மெழுகிடப்பட்ட உறையில் இடப்பட்டு இடது பக்கத்து மேல் மூலையில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு குறிப்பிடல் வேண்டும் :-

"..................... இலக்கமுள்ள ...................... கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்"

2007.05.16 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பதாக நாத்தாண்டிய பிரதேச செயலாளர் அலுவலகத்தில் உள்ள கேள்விப்பத்திர பெட்டியில் அதனை இடுதல் அல்லது பதிவுத் தபால் மூலம் மேற்குறிப்பிடப்பட்டுள்ள நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982, ஓகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு இடும் நிபந்தனைகளுக்கமைய இடுதல் வேண்டும்.

5. 2007.05.16 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் கேள்விப்பத்திர கோரிக்கையாளர்கள் இச்செயலகத்தில் சமுக மளித்தல் வேண்டும்.

6. இவ்வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய விற்பனை பெறாத தவறணைகள் ஏதும் இருப்பின் இவைக்காக விற்பனை மீண்டும் 2007.05.30 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் இச்செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

எச். எம். எல். சந்திரசிரி,
பிரதேச செயலாளர்,
நாத்தாண்டிய.

எனது இல. : நா/ஆ/05/10/03
பிரதேச செயலகம்,
நாத்தாண்டிய.
2007.04.10.

**அட்டவணை**

| பகுதி | கிராமம் | கேள்விப் பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப் பத்திரம் வைப்புப் பணம் ரூ. ச. |
|---|---|---|---|
| நாத்தாண்டிய | முதுகட்டுவ | 2007.05.16 மு. ப. 10.00 | 1000 0 |
| நாத்தாண்டிய | கட்டுநேரிய | 2007.05.16 மு. ப. 10.00 | 1000 0 |

4-499

---

## மாதம்பை பிரதேச செயலகப் பிரிவில் கள்ளுத் தவறணை விற்பனையும் குத்தகை விற்பனையும் - 2007 /2008

(2007 ஆம் ஆண்டு யூலை மாதம் முதல் 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் வரை)

2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆந் திகதி முதல் 2008 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரையுள்ள காலப் பகுதிக்கு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள கள்ளுத்தவறணைகள் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு அமைய, சில்லறையாக கள்ளு விற்பனை செய்வதற்கான கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) தற்போது அமுலில் இருக்கும் எல்லா அனுமதிப் பத்திரங்களும் பொது நிபந்தனைகளுக்கமையவும் ;

(ஆ) 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதி 207 ஆம் இலக்க கள்ளுத்தவறணைகளைக் குத்தகைக்கு இடும் நிபந்தனைகளுக்கமைவாகவும்.

2. எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பெற்றுக் கொள்ளக்கூடிய உரிய படிவத்தில் கேள்வியைச் சமர்ப்பிப்பதுடன் கீழ் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களுக்கு அமைய வைப்புப் பணமாக

மாதம்பை பிரதேச செயலாளர் அலுவலகத்தில் செலுத்துவதற்கான பற்றுச்சீட்டையும் விண்ணப்பிக்கும் தொகையில் 15% பெறுமதியுள்ள அத்தாட்சிச் சான்றிதழும் இணைக்கப்படல் வேண்டும்.

3. கேள்விப்பத்திரங்கள் முறையாக பொறியிடப்பட்டு கடித உறையிலிட்டு இடப்பக்கத்தில் தவறணையின் பெயரும் இலக்கமும் பின்வருமாறு:-

"………13………… இலக்கமுள்ள பம்பல கள்ளுத் தவறணைக்குரிய கேள்விப்பத்திரம்"

என குறிப்பிட்டு 2007.05.18 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு முன்பு மாதம்பை பிரதேசச் செயலகத்தில் உள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத் தபாலில் மேற்குறிப்பிட்ட நேரம், திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், மாதம்பை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கேள்விப்பத்திரங்கள் 1982 ஒகத்து 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள கள்ளுத்தவறணைகளை குத்தகைக்கு விடும் நிபந்தனைகளுக்கு அமைய செயற்படல் வேண்டும்.

5. 2007.05.18 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடனே எல்லாக் கேள்விப்பத்திரங்களும் திறக்கப்படும். அந்நேரம் மனுதாரர் அனைவரும் இச்செயலகத்திற்கு சமுகமளித்தல் வேண்டும்.

6. மேற்குறிப்பிட்ட தினத்தில் விற்பனையாகாமல் தவறணைகள் ஏதும் இருப்பின் இவற்றுக்கான மீள் விற்பனை 2007.06.04 ஆந் திகதி காலை 10.00 மணிக்கு இவ்வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளுக்கு அமைய நடைபெறும்.

7. இது தொடர்பாக மேலதிக விபரங்கள் மாதம்பை பிரதேசச் செயலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விக்ரம வாரகொட,
பிரதேச செயலாளர்,
மாதம்பை.

பிரதேச செயலகம்,
மாதம்பை.
2007.04.11.

**அட்டவணை**

| இல. | பகுதி | கிராமம் | தவறணை கேள்விப்பத்திரம் ஏற்கும் நேரமும் இறுதித் திகதியும் | கேள்விப் வைப்புப் பணம் ரூ. ச. |
|---|---|---|---|---|
| 01 | பிடிகல் கோரலை பம்பல | பம்பல | 2007.05.18 மு. ப. 10.00 மணி | 1000 0 |

4-504

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணித் தத்துவப்பத்திரத்தை இல்லாதொழித்தல்

இலக்கம் 69/4, கடவத்த வீதி, தெஹிவளையில் வசிக்கும் அந்தனி அல்ட்ரிச் சொக்மன் ஆகிய நான், கொழும்பு பிரசித்த நொத்தாரிசு பத்மினி எச். வேகல்ல அவர்களால் 10.01.2003 ஆந் திகதி எழுதி உறுதிப்படுத்திய 2518 இலக்கமுடைய அட்டோர்ணித் தத்துவப் பத்திரத்தை இத்தால் இல்லாதொழிப்பதுடன் அகஸ்டின் ஏர்னஸ்ட் சுரேஸ் என்பவரால் மேற்கொள்ளப்படும் எச்செயல்களுக்கும் நான் பொறுப்பல்ல என்பதையும் இத்தால் அறியத்தருகிறேன்.

அந்தனி அல்ட்ரிச் சொக்மன்.

07.04.2007

4-486

---

## அட்டோர்ணித் தத்துவப்பத்திரத்தை இல்லாதொழித்தல்

கடுவெலை, வெலிவிட்டவில் உள்ள 339 ஆம் இலக்கத்தில் வசிக்கும் பட்டிவிதானலாகே டேவிட் பெரேரா ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு பீ. டீ. ஆர். பிரியதர்ஷனியினால் 2004, நவெம்பர் 19 ஆந் திகதி உறுதி செய்த 1639 ஆம் இலக்கம் கொண்ட அட்டோர்ணித் தத்துவப் பத்திரம் மூலமாக அங்கொடை, களனிமுல்லை, ஹன்சகமையில் உள்ள 238/A/17 இல் வசிக்கும் (தே. அ. அட்டை இல. 607603376 V ) மாரப்புலிகே மாலனீ (பதின் நோனா என்றும் அழைக்கப்படுவர்) யும், (தே. அ. அட்டை இல. 520954422 V) சமரநாயக சிறில் தர்மரத்ன (மனைவியும் கணவருமானவர்களை) எனது அட்டோர்ணி தத்துவக்காரர்களாக மேற்கூறிய அட்டோர்ணித் தத்துவப்பத்திரத்தில் குறிப்பிட்டவைகளுக்கு எனது தேவைகளை செய்து கொள்வதற்கு நியமனம் செய்ததை இதன் மூலம் வாபஸ் பெற்று இரத்துச் செய்கிறேன்.

இன்றைய திகதியிலிருந்து நியமனம் செய்திருந்த மேற்கூறிய தத்துவக்காரர்களை இரத்துச் செய்வதுடன், மேற்கூறிய தத்துவக்காரர்களினால் செய்து கொள்ளும் எந்த உடன்படிக்கைக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன் என்பதை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் சகல பொது மக்களுக்கும் அறிவிப்புச் செய்கிறேன்.

பட்டிவிதானலாகே டேவிட் பெரேரா.

கொழும்பு,
20.01.2007.

4-492

**அட்டோர்ணித் தத்துவப்பத்திரத்தை இல்லாதொழித்தல்**

பாணந்துறை, 6 ஆம் குறுக்கு வீதியில் உள்ள 26/1 ஆம் இலக்கத்தில் வசிக்கும் கருணாகளகே அருன பாலித த சில்வா ஆகிய நான், 1988.10.17 ஆந் திகதி பாணந்துறை பிரசித்திபெற்ற நொத்தாரிசு லியன ஆரச்சிகே மலிக் பிரசன்ன விஜேசிங்கா மூலமாக அத்தாட்சி செய்த 2126 ஆம் இலக்கம் கொண்ட அட்டோர்ணித் தத்துவப் பத்திரத்தால் பாணந்துறை, நல்லூருவவில் உள்ள பவித்ரி என்ற பெயரில் இருக்கும் வீட்டில் வசிக்கும் கருணாகளகே லால் சனத் த சில்வா என்பவரை அட்டோர்ணித் தத்துவக்காரராக நியமித்ததை இத்தால் இரத்துச் செய்து செல்லுபடியற்றதாக்கிவிட்டேன் என அறிவித்தல் செய்கிறேன். அதன்படி 2007 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதியிலிருந்து மேற்கூறிய கருணாகளகே லால் சனத் த சில்வாவினால் செய்து கொள்ளப்படும் எந்த நடவடிக்கைக்கும் நான் பொறுப்பு இல்லை என்றும் அதனால் நான் பொறுப்பாளியாகமாட்டேன் என்றும் எல்லோருக்கும் அறியத்தருகிறேன்.

கருணாகளகே அருன பாலித த சில்வா

4-419

---

# ஏல விற்பனைகள்

**வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி – காலிக் கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் பெறுமதிமிக்க சொத்து பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

**தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பற்றுவே, ஹபராதுவ பிரதேச எல்லைக்குள் தலவெல்லேயில் இருக்கும் பதலிகே வத்த அல்லது மகா விதானகே வத்த எனும் பெயரால் அறிமுகப்படுத் தப்படும் காணித்துண்டை அளந்து வேறாக்கப்பட்ட லொட் 1 உம் லொட் 2 என்ற காணித்துண்டுகள் இரண்டும் அதில் உள்ள கட்டடங் கள் மற்றும் அனைத்தும் ஏல விற்பனை**

**விஸ்தீரணம்: லொட் 1 – 2றூ. 5.6 பேர்ச்சஸ்**
**லொட் 2 – 10.2 பேர்ச்சஸ்**

காலி பகிரங்க நொத்தாரிசு ஏ. எம். எஸ். மரிக்கார் அவர்களால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கிப் பெயரால் எழுதப்பட்டதுமான 1998.11.09 ஆந் திகதியதும் 7688 ஆம் இலக்க முறியின் கீழ் வருமதியான கொடுப்பனவில் சென்ரத் ஆனந்த விமலசேன என்பவர் கடனாளராக தவணை தவறியுள்ளராதலால்,

வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி என் மீது வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், குறிப்பிடும் சொத்து அமைந்துள்ள இடத்திலேயே 2007, மே மாதம் 18 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்மான அறிவித்தலுக்காக.**– 2007.03.09 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2007.03.20 ஆந் திகதிய "த ஐலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**–ஏல விற்பனை முடிவில் வெற்றிகரமான கொள்வனவாளர் கீழே குறிப்பிட்ட கட்டணங்களைப் பணமாகச் செலுத்துதல் வேண்டும் :-

(1) கொள்வனவு விலையில் 10% ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தவேண்டிய கட்டணம் 1% ;
(3) ஏல விற்பனையாளரின் தரகுப் பணம் 2 1/2% ;
(4) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் 500% ;
(5) வேறு கொடுப்பனவுகள் ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு அத்தாட்சிப் படுத்தப்பட்ட கட்டணம் 2000.

விலைக்கு வாங்கிய பணத்தில் 90% பங்கு பணத்தை 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கிக்கு செலுத்துதல் வேண்டும். 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய 10% த்தை திருப்பிச் செலுத்தாமல் இருக்கவும் சொத்தை மீள விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமைப் பத்திரங்களையும் மேலதிக விபரங்களையும் "முகாமையாளர், ஹட்டன் நஷனல் வங்கி – காலி கிளை, (தொலைபேசி இல. : 091-2232248) அல்லது கொழும்பு 10, டீ. பி. ஜாயா மாவத்தை, இலக்கம் 479 பிரதான அலுவலகம், பிரதான முகாமையளர் (கடன் அறவிடுபவர்) (தொ. பே. இல. 2661815, 2661816)" இல் பெற்றுக் கொள்ளலாம்.

என். எச். பி. எம். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளரும் அதிகாரம்
பெற்ற ஏலவிற்பனையாளரும்.

இல. 34/31, அல்லது 32,
நீதி சட்டத்தரணிகள் அலுவலகத் தொகுதி,
கொழும்பு 12.

4-455

---

**வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி – நொச்சியாகம கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

**கபுருகமுவ கராண்டுவையில் பெறுமதி வாய்ந்த சொத்து ஏல விற்பனை**

மாத்தறை பிரசித்த நொத்தாரிசு எஸ். பி. சென்ரத் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதும் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல்

வங்கிப் பெயருக்கு எழுதப்பட்டதாகவும் 2002.11.08 ஆந் திகதி இல. 3138 முறியின் கீழ் வருமதியான கொடுப்பனவில் விதானராளலாகே இஸ்கோல வத்த கெதர ரொஹான் ரனதுங்க, சுமித்ரா அந்திரிக்கு ஜயரத்ன, விதானராளலாகே லயனல் குணதிலக கடனாளர்களாகவும் விதானராளலாகே இஸ்கோலவத்தே கெதர ரொஹான் ஈடுவைத்தவராகவும் கடனாளராகவும் தவறியுள்ளாராதலால், வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கியால் என் மீது வழங்கப்பட்டுள்ள அங்கீகாரத்துக்கு அமைய கிடைக்க வேண்டிய கடன் பணத்தொகையையும் ஏலவிற்பனை செலவுகளும் உட்பட எல்லாப் பணத்தையும் பெற்றுக் கொள்வதற்காகத கீழே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சொத்தை 2007.05.15 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு ஆதனம் அமைந்துள்ள இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

### அட்டவணை

தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோறளைக்குள் கறந்துவ என்னும் இடத்தில் அமைந்துள்ளதும் மஹதின்ன வத்த என அழைக்கப்படுவதுமான காணியின் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் எச். ஜே. சமரபால என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002.01.20 ஆந் திகதிய 1622 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 1 என அடையாளமிடப்பட்டதுமான அவ்வரையறுக்கப்பட்ட காணித்துண்டு கட்டிடங்களும் மற்றும் அனைத்தும் காணியின் விஸ்தீரணம் 1 றூட் (பேரகஸ்வத்த காடை அருகில் உள்ள சுமித்திரா செவன வீடும் கடையறையுமாகும்).

**தீர்மான அறிவித்தலுக்கு.**- 2006.03.10 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006.03.22 ஆந் திகதிய "த ஜலண்ட்", "திவயின" மற்றும் "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**-

(1) கொள்வனவு விலையில் 10% ;

(2) உள்ளூர் ஆட்சிக்கான விற்பனை வரி 1% ;

(3) ஏலதாரரின் தரகுப் பணமாக கொள்வனவு விலையில் 2 1/2%;

(4) விற்பனை பத்திரத்தைத் தயாரிப்பதற்கான நொத்தாரிசு கட்டணம் ரூ. 2000% ;

(5) எழுதுவினைஞர் மற்றும் கூவுவோர் கட்டணம் ரூபா 500, உட்பட எல்லா விளம்பரச் செலவுகளும் ஆகும்.

கொடுப்பனவு விலையில் மிகுதி 90% விற்பனைத் திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் "கொழும்பு 10, டீ. பி. ஜாயா மாவத்தை, இல. 479, வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி, பிரதம முகாமையாளர் சட்ட சம்பந்தமானது (அறவீடுகள்) இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. 2661815 மற்றும் 2661819.

சொல்லப்பட்ட தொகை 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால் ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையில் 10% தண்டப்பணமாக அறவிடவும் மீள் விற்பனை செய்யவும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.

உரித்து உறுதிகளையும் அவை தொடர்பான வேறு ஆதனங்களையும் "வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி- காலிக் கிளை (தொ. பே. இலக்கம் 091-2232248)" அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பிரதான அலுவலகத்தில் சட்ட சம்பந்தமான அதிகாரியிடம்" பெற்றுக் கொள்ள முடியும்.

என். எச். பி. எப். ஆரியரத்ன,
நீதிமன்ற ஆணையாளர்,
ஏலதாரர், மதிப்பீட்டாளர்.

இல. 14, சிறி தர்மாராம மாவத்தை,
கோட்டே,
மாத்தறை.
தொலைபேசி இல. : 041-2223847 அல்லது 2231263

4-456

---

## கமர்ஷியல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் - கிரிபத்கொடை கிளை

ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏல விற்பனை

*(கடன் எடுத்த மெட்ரோ எண்ட்பிரைஸ் என்ற பெயரில் தனி உரிமையாளராக வியாபாரம் செய்யும் மொகமட் நயீம் மொகமட் ரிபாய் மேற்கூறிய ஆதனத்தை கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட்டிற்கு ஈடுவைத்துள்ளார்.)*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பணிப்பாளர்கள் சபையினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் விபரிக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் 2007, மே மாதம் 22 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**ஆதனத்தின் விவரணம்.**-மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், பியகமவில் இலங்கை முதலீட்டு சபையில் அதிகாரி பத்து சியன கோரளையில் மாகொல வடக்கு கிராமத்தில் அமைந்துள்ள கொண்காவத்த பெலண்காவத்த மற்றும் மில்லகாவத்த என்ற காணிக்கு நிலஅளவையாளர் என். லோகநாதன் அவர்களின் 1974.12.3 ஆந் திகதியுடைய வரைபடம் இல. 1767 இல் காண்பிக்கப்பட்ட லொட் C2A மற்றும் C2B என்ற காணிகளின் ஒன்றாக்கப்பட்ட நிலஅளவையாளர் கே. மாசிலாமணியின் 1993.08.01 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1604 இல் காண்பிக்கப்பட்ட லொட் 1 என்ற காணித்துண்டு இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ. 0றூ. 10பே.)

**தீர்மானம் பற்றிய விளம்பரத்துக்காக.**-2006.10.13 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியும், "லங்காதீப", "த ஜலண்ட்" மற்றும் "தினகரன்" பார்க்கவும் மற்றும் 27.04.2007 ஆந் திகதியுடைய அரசாங்க வர்த்தமானியையும், 2007.04.27 ஆந் திகதியுடைய "லங்கா தீப" மற்றும் "த ஜலண்ட்" ஆகிய பத்திரிகைகளை விற்பனை விளம்பரத்துக்காக தயவு செய்து பார்க்கவும்.

**ஆதனத்திற்கு செல்லும் விதம்.**-கொழும்பு, கண்டி வீதியூடாக கிரிபத்கொடை சந்திக்கு வரை செல்லவும். அதன் பிறகு வலது பக்கம் திரும்பி 1,600 கிலோ மீட்டர் மாகொல வீதியூடாக சென்று இடது பக்கம் திரும்பி 250 மீட்டர் பாத்திமா காடென்ஸ் சென்ற பிறகு இக்காணியை அடைய முடியும்.

**கட்டணம் செலுத்தும் விதம்**.- ஏல விற்பனையின் இறுதியில் உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களைப் பணமாக செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிக்கான விற்பனை வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகு பணமான 2 1/2% ;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் மற்றும் பறையறைவோர் கட்டணம் ரூபா 500 % ;
(6) ஏலத்திற்கான விளம்பரச் செலவுகள் எல்லாம் ;
(7) கொள்வனவு விலையின் மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் பிரதான கிளையில் அல்லது கிரிபத்கொடை கிளையாக இடுதல் வேண்டும்.

உரித்து உறுதிகளையும் மற்றும் தொடர்பு ஆவணங்களையும் பின்வரும் உத்தியோகத்தர்களிடம் பெற முடியும். - "முகாமையாளர், கமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிட்டெட், இல. 145, கண்டி வீதி, கிரிபத்கொடை, தொலைபேசி இல. : 2909956-7, 2909954, பக்ஸ் இல. : 2909955."

எல். பி. சேனநாயக்க (ஜே. பி.),
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
விலைமதிப்பிடுபவர், நீதித்துறை
ஆணையாளர், கொழும்பு மாவட்ட
வர்த்தக நீதிமன்றம் மேல் மாகாணம்,
அரசாங்க மற்றும் வர்த்தக வங்கிகள்,

99, புதுக்கடை வீதி,
கொழும்பு 12,
தொலைபேசி இல. 2445393.

4-468

---

### மக்கள் வங்கி - கொபேகனே கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்

**வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தேவமெதி ஹத்பத்துவ, பலதொர கோரலை, கொபேகனே என்ற கிராமத்தில் அமைந்துள்ள "வானோஹோ" தற்போது தோட்டம் என்ற காணிக்கு அளந்து தயாரிக்கப்பட்ட 5509 ஆம் இலக்க வரைபடத்தின் 01 ஆம் இலக்க காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்கலாக ஏல விற்பனை**

**காணியின் விஸ்தீரணம் : மூன்று தசம் ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 3.9பே.)**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ், 2007.06.06 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏல விற்பனை செய்யப்படும்.

2005. 04. 15 ஆந் திகதி இலங்கை அரசின் வர்த்தமானியையும் 2005. 07. 14 ஆந் திகதிய "டெய்லி நியூஸ்", "தினமின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஏல விற்பனை தீர்மான அறிவித்தல்களுக்கு கவனம் செலுத்தவும்.

**காணிக்குச் செல்லும் வழி**.- கொபேகனே பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**பணம் செத்தும் முறை**.- ஏல விற்பனையின் இறுதியின் போது சொத்தை விலைக்கு வாங்கிய நபர் கீழ் குறிப்பிட்டுள்ளவாறு கொடுப்பனவை பணமாகச் செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% த்தையும் ;
2. உள்ளூராட்சி அதிகார சபையினதும், பிரதேச சபையினதும் பணம் 1%வரியையும் ;
3. ஏலவிற்பனையாளரின் பங்காக ஏலவிற்பனை தொகையின் 2.5% கமிசனையும் ;
4. எழுதுவினைஞர்களினதும் அறிவிப்பாளர்களினதும் கட்டணமாக 500 ரூபாவையும் ;
5. விற்பனை செலவும், ஏனைய கட்டணங்கள் இருப்பின் அத்தொகையும் ;
6. விற்பனை சான்றிதழுக்கான முத்திரை கட்டணத்தையும்.

கொள்முதல் விலையில் மீதி 90% தொகையும் விற்பனை தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் "மக்கள் வங்கி - குருநாகல் பிரதேச பிரதம முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 037 - 2222453, பெக்ஸ் இல. 037 - 2222338.

உரிமைப்பத்திரம், மேலதிக விபரங்களை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியால் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள பணத் தொகை 30 நாட்களுக்குள் செலுத்தாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்டுள்ள கொள்வனவு விலையில் 10% தொகையை மீண்டும் செலுத்தாமல் விடுவதற்கும், மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்யும் உரிமையும் மக்கள் வங்கிக்கு உண்டு.

டபிள்யூ. எம். ஜ. கல்லேல்ல,
நீதிமன்ற ஆணையாளர்,
உத்தரவு பெற்ற ஏலதாரர்
மதிப்பீட்டாளர்.

இல. 28, "புதியசட்டத்தரணிகள் கட்டிடத்தொகுதி",
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. : 037-2220062

4-481

**மக்கள் வங்கி – தெல்தொட்ட கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்ட 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் விற்பனை அறிவித்தல்*

**மத்திய மாகாணத்தில், கண்டி மாவட்டத்தில், பாத்தஹேவாஹெட்ட ஹேவாவிஸ்ஸ கோரளே நவநெலியவில் அமைந்துள்ள உத்தரவு பெற்ற அளவையாளரான செனரத் விஜேரத்ன அவர்களால் 1992.11.24 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1682 ஆம் இலக்கங்கொண்ட முலவரைவு படத்தின் 01 ஆம் லொட் இலக்கம் என அடையாளமிடப்பட்டிருக்கும் ஒரு ஏக்கர் பதினைந்து பேர்ச்சஸ் (01ஏ. 0ரூ. 15பே.) விசாலமுள்ள கரந்தகொல்லஹேன என்றழைக்கப்படும் காணி ஏல விற்பனை**

மக்கள் வங்கி மூலம் எமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் எங்களால் எங்களால் 2007. 06. 13 ஆந் திகதி மு. ப. 11. 30 மணிக்கு பிரசித்த ஏலத்தில் ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே விற்பனை செய்யப்படும்.

2004. 12. 24 ஆந் திகதிய அரச வர்த்தமானியிலும், 2007. 03. 01 ஆந் திகதிய "தினமின", "தினகரன்" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் ஏல விற்பனை தீர்மான அறிவித்தல்களுக்கு கவனம் செலுத்தவும்.

**காணிக்குச் செல்லும் வழி**.- தெல்தொட்டை நகரத்திலிருந்து இடது பக்கத்தில் இருக்கும் கொலம்பிஸ்ஸ பாதையில் 10 கிலோமீட்டர் அளவில் நவநெலிய வரை பயணம் செய்து வலது பக்கத்தில் இருக்கும் அடிப்பாதையில் 90 மீட்டர் அளவில் கீழே பயணம் செய்த பின்பு அடி பாதையில் வலது பக்கத்தில் மேற் கூறப்பட்ட ஆதனம் அமைந்துள்ளது.

**பணம் செலுத்தும் முறை**.- ஏல விற்பனையின் இறுதியின் போது ஒரு சிறந்த கொள்வனவாளர் மூலம் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் ஒரு பணத்தொகையைச் செலுத்த வேண்டும் :-

1. கொள்வனவு விலையின் 10% உம் ;
2. மாகாண அதிகார சபையின் குத்தகைப்பணம் 1% உம் ;
3. ஏலதாரரின் கொமிஸ் கட்டணமாக விற்பனை விலையில் 2.5 வீதமும் ;
4. லிகிதர் அறிவித்தல் கட்டணமாக 500 ரூபா ;
5. விற்பனை செலவும், ஏனைய கட்டணங்கள் இருப்பின் அத்தொகையும் ;
6. விற்பனை சான்றிதழுக்கான முத்திரை கட்டணமும்.

கொள்முதல் விலையில் மீதி 90% தொகையும் விற்பனை தினத்திலிருந்து 30 நாட்களுக்குள் "மக்கள் வங்கி – கண்டி பிரதேச பிரதம முகாமையாளர்" இடம் செலுத்த வேண்டும். தொலைபேசி இல. : 081 – 2234283, பெக்ஸ் இல. 081 – 2223017

உரிமை ஒப்பனைகளும், ஏனைய அதற்குரிய விபரங்களும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விலாசத்திலிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் குறிப்பிடப்பட்டுள்ள பணத் தொகை 30 நாட்களுக்குள் செலுத்தாவிட்டால், தற்போது செலுத்தப்பட்டுள்ள கொள்வனவு விலையில் 10% தொகையை மீண்டும் செலுத்தாமல் விடுவதற்கும், மீண்டும் ஆதனத்தை விற்பனை செய்யும் உரிமையும் மக்கள் வங்கிக்கு உண்டு.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
இலங்கையில் முன்னணியில்
திகழும் உத்தவு பெற்ற ஏலதாரர்களாவர்.
(அரச தனியார் வங்கியாளர்களுக்காகவும்,
மற்றும் நீதிமன்ற ஆணையாளர்களுக்காகவும்.

| புதிய நகர அலுவலகமும் : ஏலதாரர்களின் அறையும்: | நகர அலுவலகமும் காட்சி அறையும் : |
|---|---|
| 290, ஹவ்லொக் றோட், | 24, டொறிங்ரன் வீதி, |
| கொழும்பு 5. | கண்டி. |
| தொலைபேசி இல.:011-2585408 | தொலைபேசி இல.: 081-2224371 |
| 011-2502680 | 081-2227593 |
| தொலைநகல் இல.:011-2538176 | தொலைநகல் இல.: 081-2224371 |
| மின்அஞ்சல் : samera@sri lanka.net | |

4-483